## சட்ட அலுவலர் - தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்பு - 2023
## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சட்ட அலுவலர் - தரம் II பதவியில் நிலவும் வெற்றிடங்களுக்கு நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்காக தற்போது அரச சேவையில் நிரந்தரப் பதவி வகிக்கும் அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்:-**

இந்தப் பதவி நிரந்தரமானதாகும். ஊழியர் சேமலாப நிதியத்திற்கு மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான பங்களிப்பைக் கொண்டுள்ளதாகும்.

**தகைமைகள் :-**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டம் தொடர்பான பட்டம் அல்லது சட்டத்தரணியொருவராக இருத்தல் (Law or Attorney at law) மற்றும் அந்தத் தகைமைகளைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் குறித்த துறையில் ஒரு வருட கால அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

2. விண்ணப்ப முடிவுத் திகதியன்று 45 வயதிலும் அதிகமாக இருத்தலாகாது.

3. நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

4. இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குப் பொருத்தமான உடல் மற்றும் உள ரீதியான தகுதியினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத் திட்டம் :-**

MM 1-1-2016 - (ரூ. 53,175-10x1375-15x1910-95,575)

இது தவிர அடிப்படைச் சம்பளத்தின் 25% படி மற்றும் வாழ்க்கைச் செலவுப் படி செலுத்தப்படும்.

**ஆட்சேர்ப்பு முறை :-**

- கீழ் குறிப்பிடப்படும் விடயங்களை அடிப்படையாகக்கொண்டு நடாத்தப்படும் கட்டமைக்கப்பப்பட்ட நேர்முகப் பரீட்சை ஊடாக பொருத்தமானவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்

| | | |
|---|---|---|
| தொடர்புடைய மேலதிக கல்வி, தொழில் தகைமைகள் | - | 30 புள்ளிகள் |
| தொடர்புடைய மேலதிக அனுபவம் | - | 30 புள்ளிகள் |
| ஏனைய தகைமைகள் | - | 15 புள்ளிகள் |
| நேர்முகப் பரீட்சையின்போது காண்பிக்கும் திறமை | - | 25 புள்ளிகள் |

- பொருத்தமானவர்களைத் தெரிவு செய்யும்போது, விண்ணப்பதாரி நேர்முகப் பரீட்சையின்போது பெற்றுக்கொண்ட புள்ளிகள், விண்ணப்பதாரியால் கோரப்படும் சேவை நிலையம் மற்றும் வெற்றிடங்களின் எண்ணிக்கை (மொழி ஊடகத்திற்கமைய) போன்ற விடயங்கள் கவனத்திற்கொள்ளப்பட்டு முன்னுரிமை அடிப்படை தயாரிக்கப்படும்.

| சேவை நிலையம் | வெற்றிடங்களின் எண்ணிக்கை (மொழி ஊடகத்திற்கமைய) | | மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| | சிங்களம் | தமிழ் | |
| 1. தலைமை அலுவலகம் - கொழும்பு | 3 | 3 | 6 |
| 2. பதுளை | 1 | - | 1 |
| 3. அனுராதபுரம் | 1 | - | 1 |
| 4. வவுனியா | - | 1 | 1 |
| 5. யாழ்ப்பாணம் | - | - | - |
| 6. திருகோணமலை | - | 1 | 1 |
| 7. கல்முனை | - | - | - |
| 8. மாத்தறை | - | - | - |
| 9. மட்டக்களப்பு | - | 1 | 1 |
| 10. கண்டி | - | 1 | 1 |
| 11. அம்பாறை | 1 | - | 1 |

மேலே குறிப்பிடப்பட்ட பிரகாரம் தகைமைகளைப் பெற்றுக்கொண்டவர்கள் சட்ட அலுவலர் தரம் - II இற்கு ஆட்சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். 03 வருட தகுதிகாண் காலத்திற்காக ஆட்சேர்த்துக்கொள்ளப்படுவதுடன், தகுதிகாண் காலத்தை சிறப்பான வகையில் நிறைவு செய்பவர்களை பதவியில் உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

பதவிக்குரித்தான பதவியுயர்வு மற்றும் ஏனைய அனுகூலங்கள் சட்ட அலுவலர் பதவிக்குரிய ஆட்சேர்ப்பு நடைமுறைக்கமைய மேற்கொள்ளப்படும்.

கீழ் குறிப்பிடப்படும் படிவத்திற்கமைய A4 தாளில் தயாரித்துக்கொள்ளப்படும் விண்ணப்பங்களை **2023/03/30** ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு செயலாளர், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, இலக்கம் 14, ஆர்.ஏ. டி மெல் மாவத்தை, கொழும்பு 04 எனும் முகவரிக்கு தபாலில் அனுப்புதல் வேண்டும்.

செயலாளர் (பதில் கடமை),
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு.

**இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு**

**சட்ட அலுவலர் - தரம் II பதவிக்கான விண்ணப்பம்**

1. முழுப் பெயர் (சிங்களத்தில்) :- ......................................................................

   (ஆங்கிலத்தில்) :- ......................................................................

2. முதலெழுத்துக்களுடன் பெயர் :- ......................................................................

3. நிரந்தர வதிவிட முகவரி (சிங்களத்தில்) :- ......................................................................

   ......................................................................

   (ஆங்கிலத்தில்):- ......................................................................

   ......................................................................

4. பாலினம் (ஆண் / பெண்) :- ..........................................

5. விவாக நிலைமை :- ..............................

6. பிறந்த திகதி :- ................................

7. விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது :- வருடங்கள். ...........மாதங்கள்...... ... நாட்கள் ......

8. தேசிய அடையாள அட்டை இல.:-.........................

9. தொலைபேசி இல. :- .................................

10. அரச சேவையில் தற்போது வகிக்கும் பதவி :- ..........................................

11. முதல் நியமனத் திகதி :- ..........................................

12. சேவை நிலையம் மற்றும் முகவரி :- ......................................................................

    ......................................................................

13. விண்ணப்ப முடிவுத் திகதியன்று சேவைக் காலம் :- வருடங்கள். ........மாதங்கள்..... நாட்கள் ......

14. தற்போது வகிக்கும் பதவிக்குரித்தான கடமைகளின் தன்மை (சுருக்கமாக) :-

    ..........................................................................................................................

    ..........................................................................................................................

    ..........................................................................................................................

    ..........................................................................................................................

15. ஐ. கல்வித் தகைமைகள் (சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை இணைத்தல் வேண்டும்) :-

| சட்டம் / சட்டத்தரணிப் பட்டம் | கற்ற நிறுவகம் | கற்ற பாடங்கள் | பட்டம் செல்லுபடியாகும் திகதி |
|---|---|---|---|
| | | | |

II. பட்டப்பின் படிப்புத் தகைமைகள் :-
(சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை இணைத்தல் வேண்டும்)

| முதுமாணிப் பட்டம் / பட்டப்பின் டிப்ளோமா | கற்ற நிறுவகம் | கற்ற பாடங்கள் | செல்லுபடியாகும் திகதி |
|---|---|---|---|
| | | | |

16. ஏனைய கல்வித் தகைமைகள் :- (சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை இணைத்தல் வேண்டும்)

| பாடநெறி | கற்ற நிறுவகம் | பாடநெறிக் காலப் பகுதி | செல்லுபடியாகும் திகதி |
|---|---|---|---|
| | | | |

17. ஏனைய தொழில் தகைமைகள் :- (சான்றிதழ்கள் ஊடாக உறுதிப்படுத்தப்படல் வேண்டும்)

| பாடநெறி | கற்ற நிறுவகம் | பாடநெறிக் காலப் பகுதி | செல்லுபடியாகும் திகதி |
|---|---|---|---|
| | | | |

18. ஏனைய சேவை அனுபவம் :- (சேவைச் சான்றிதழ் ஊடாக உறுதிப்படுத்தப்படல் வேண்டும்)

| வகித்த பதவி | நிறுவனம் | சேவைக் காலம் |
|---|---|---|
| | | |

19. மொழித் தேர்ச்சி :- ( ✓ அடையாளத்தை இடவும்)

| மொழி ஊடகம் | மிகச் சிறப்பு | மிக நன்று | நன்று | சாதாரணம் |
|---|---|---|---|---|
| சிங்களம் | | | | |
| தமிழ் | | | | |
| ஆங்கிலம் | | | | |

20. விண்ணப்பிக்கும் சேவை நிலையம் (உங்களுடைய முன்னுரிமை வரிசைக்கிரமத்திற்கமையக் குறிப்பிடவும். முன்னுரிமையை பின்னர் மாற்றியமைப்பதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது.)

| சேவை நிலையம் | மொழி ஊடகம் | |
|---|---|---|
| | சிங்களம் | தமிழ் |
| 1 | | |
| 2 | | |
| 3 | | |

மேலே குறிப்பிடப்பட்ட தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என உறுதிப்படுத்துகின்றேன்.

.............................. ......................................

திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

<u>நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :-</u>

மேலே 9,10,11,12,13 ஆம் இலக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என உறுதிப்படுத்துகின்றேன்.

.............................. ......................................

திகதி திணைக்களத் தலைவரின் கையொப்பம் மற்றும் பதவி முத்திரை